7th September 1959]

SRI S. LAZAR : லேபர் கோர்ட், லேபர் ட்ரிப்யூனல் மூலம் தொழிலாளர்களுக்குச் சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும்போது அதைப் பார்த்து அப்பீல் செய்கிற காலத்தில் சம்பளம், போனஸ் இது போன்ற காரியங்களைப் பொறுத்தாவது "ஸ்டே" கொடுக்க முடியாத நிலைமையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்றைக்கு நம்முடைய சட்டத்தின் கீழ் அப்பீலே கிடையாது. ஹைகோர்ட்டுக்கு ரிட் ஜுரிஸ்டிக்ஷன் மூலமாகவும், சுப்ரீம் கோர்ட்டுக்கு ஆர்டிகிள் 136 மூலமாகவும்தான் போக முடியும். 1950-ம் வருஷத்தில் அப்பீல் செய்து இந்தச் சட்டத்தின்படி "ஸ்டே" கொடுப்பது பற்றி சில விதிகள் போடப்பட்டிருந்தன. ஆனால் அந்தச் சட்டம் இன்றைக்கு ரத்தாகி விட்டது. மீண்டும் அப்பீல் ட்ரிப்யூனல் வைக்கலாமா என்ற விஷயம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது இந்த யோசனைகள் எல்லாம் கவனிக்கப்படும்.

Binny Engineering, Limited

*176 *Q.*—SRI S. PAKKIRISWAI PILLAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பின்னி என்ஜினியரிங் கம்பெனியிலே 1959-ம் ஆண்டு மே மாதத்தில் முதலாளிகள் கதவடைப்பு செய்தனரா ?

(ஆ) இக் கதவடைப்பை நீக்க இந்த அரசாங்கத்தார் என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டனர் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A settlement was reached between the parties on 21st May 1959 and the workers resumed work as per the settlement. In view of the voluntary settlement, the question of Government intervention did not arise.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்தச் சட்டத்தினுடைய விவரத்தைத் தயவு செய்து சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது தனியாக முதலாளிக்கும், தொழிலாளர்களும் செய்து கொண்டது. இது சர்க்கார் முன்பு செய்து கொள்ளப்படவில்லை. அதனால் சர்க்காரிடம் எந்தத் தகவலும் இல்லை.

Employees' State Insurance Scheme

*182 *Q.*—SRI T. SAMPATH (on behalf of SRI V. SANKARAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேலையாள்கள் ராஜ்ய இன்ஷூரன்ஸ் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கும்படி மேட்டூர் மின்சாரத் தொழிலாளர்கள் சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களின் நகல் அரசாங்கத்தாருக்குக் கிடைத்துள்ளதா ?

(ஆ) அப்படியானால், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ள உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have exempted the Mettur Workshop and Mettur Power House from the operation of the Employees' State Insurance Act except Chapter V-A thereof for a period of one year with effect from 10th June 1959.

MR. SPEAKER : We shall now take up question No. 177 put by Sri N. K. Palanisami to be answered by the Hon. Minister for Local Administration.